தனது காதலனான சூரியன் காணவில்லை
எனக் கண்டு வானெங்கும் கோடானகோடி
ஒளி தீபங்களைக் கொண்டு தேடிப்பார்க்கும் பிறை;

'இதுவே எனது உலகம்' என்று எண்ணியிறுந்த
தனது தாயின் அமைதியான கருவிலிருந்து,
பிறிந்தும் பிறியாமலும் அழுது கொண்டே வரும் குழந்தை;

தனது பிரதிபலிப்பான கடலானவளை
தழுவிக்கொள்ள முடியாமல் ஏங்கி தனது இரு கரங்களாலே
இந்த பிரபஞ்சத்தையே அணைத்திருக்கும் வானம்;

தன் உடன் பிறந்த தோழியான பூமகளை
தன்னிடமிறுந்து பறித்தெடுத்துச் செல்லும் போது
தன்னால் இயன்றவரை பழி தீர்க்க நினைக்கும் முள்ளானது;

இவையெல்லாம் படும் கஷ்டத்தைக் காட்டிலும் துன்பமானது
உன் சுவாசக்காற்றில் நான் நனையாதிறுந்த
அந்த இரண்டு நொடிப் பிரிவு!